டாக்டர் ஹபிபுல்லாபெய்க், திரு. க. ர. நல்லசிவம் திரு. ம. பொ. சி; சிவஞானம் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் இன்று 11 மணி அளவிற்கு என் அறைக்கு வருகை தந்து அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை அருள் கூர்ந்து நடத்தித் தரும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

6. அரசினர் தீர்மானம்.

தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, "தொழில்கள் வாரியத்தில் தமிழகச் சட்டப் பேரவைக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதன்பொருட்டு, 1922-ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிப்பது குறித்த சட்டத்தின் (தமிழகச் சட்டம் 5/1923) 3(1) (b) பிரிவை ஒட்டியும், 1956-ஆம் ஆண்டு தமிழக சிறு ரகத் தொழில், குடிசைத் தொழில், கடன் உதவித் தொகை அளிப்பது பற்றிய விதிகளைச் சேர்ந்த XXII (2) விதியையொட்டியும், இப்பேரவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நிச்சயிக்கக்கூடிய தேதியன்று, இச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொழில்கள் வாரியத்திற்கு இரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதாக"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

5. அறிவிப்புகள்---தொடர்ச்சி:

(இ) தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு இணங்கவும் தேர்தல் தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின்கீழ் தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்களை 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

1967 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கை—அதாவது; இரண்டுக்கு—மேற்படுமாயின், 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

7. 1967-67-ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இப்பொழுது வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எஸ். மணி அவர்கள் இப்பொழுது பேசலாம்.

திரு. எம். எஸ். மணி : சட்டமன்றத் தலைவா அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 1967–68-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையில் இன்றைய வரவு செலவினங்களைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரவு இனத்தைவிட, பழைய கடன்களைப் பார்க்கிறபோது மிகப் பயங்கரமான அளவில் நமக்குக் கடன் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசின் மொத்த கடன் 292 கோடியே 85 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே மத்திய அரசு மட்டும் நமக்குக் கொடுத்தது 269.50 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், 26 கோடியே 32 லட்சம் ரூபாயை நாம் சில்லறைக் கடன்களாகப் பெற்றிருக்கிறோம். இந்தக் கடன்கள் எவ்வளவு ஆண்டுகளிலே ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பார்க்கிறபோது 1950-வது ஆண்டிலேயே நமக்கு ஏற்பட்டிருந்த மொத்தக் கடன் 14 கோடியே 8 லட்சம் ரூபாய் அளவில் இருந்தது. அதிலே மத்திய அரசு நமக்குக் கொடுத்த அளவு 12 கோடியே 3 லட்சம் ரூபாய். அப்படிப்பட்ட கடன் 17 ஆண்டுகளிலே படிப்படியாக வளர்ந்து இன்றைய தினம் 20 கோடியாக உயர்ந்திருக்கிறது. இப்படி வளர்ந்ததற்கான காரணம் என்னவென்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இவ்வளவு கடன்களையும் அனுபவித்தவர்கள் யார், யார்? இதிலே யார் யார் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, பல புதிய இலாகாக்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன, பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அதன்காரணமாக பல சிப்பந்திகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், பல பெரும் காண்ட்ராக்ட்காரர்கள் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கோடிக்கணக்கான கடன்களினால் பொதுமக்கள் ஏதாவது பலனை அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் கொஞ்சமும் பலன் அடைந்ததாகத் தெரியவில்லை.

உதாரணமாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய மாநில